**தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்**
Peer-Reviewed | Open Access | Crossref DOI & Global Indexing | Google Scholar Impact Factor | Multidisciplinary
Article DOI: https://doi.org/10.63300/tm07042026.03

# Tolkappiyam's Thinai Structure and the Lokayata Tradition

**S. Varun Kumar***,
MA Classical Tamil Studies, Second Year, Central University of Tamil Nadu, Thiruvarur.
*Correspondence: varunkumarsubramani@gmail.com.

**Article Info**
Received on 20-April-2026, Revised on 22-April-2026, Accepted on 25-Mar-2026, Published on 01-May-2026

## ABSTRACT

Anthropologist Bhaktavatsala Bharathi posits that all academic disciplines originate from philosophy. In that sense, the creation of grammar must also have been established upon some philosophical background. The formation of grammar encompasses the linguistic practices and the socio-history of a particular land.
Tolkappiyam has performed the task of compiling and refining the linguistic and cultural practices of the Tamil land. Accordingly, it can be said that Tolkappiyam carries within itself the philosophical traditions of the Tamil soil. Indian philosophies are generally categorized into two types: Vaidika (Orthodox) and Avaidika (Heterodox). This article attempts to explain how Lokayata (Materialism), an Avaidika philosophy, aligns with the Thinai (eco-poetic) structure of Tolkappiyam.

***KEYWORDS:*** *Bhaktavatsala Bharathi, linguistic practices, Tolkappiyam, Vaidika, Thinai.*

Copyright © 2024 by the author(s). Published by Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi. This is an open access article under the Creative Commons Attribution (CC BY) license (https://creativecommons.org/licenses/by/4.0/).
Publisher's Note: The views, opinions, and information presented in all publications are the sole responsibility of the respective authors and contributors, and do not necessarily reflect the views of Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors. Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi and/or its editors hereby disclaim any liability for any harm or damage to individuals or property arising from the implementation of ideas, methods, instructions, or products mentioned in the content.

*Tamilmanam International Research Journal of Tamil Studies*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in
*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

# தொல்காப்பியத் திணை அமைப்பும் உலகாயத மரபும்

*[*]**சு. வருண் குமார்,** முதுகலைச் செவ்வியல் தமிழியல், இரண்டாமாண்டு,
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம், திருவாரூர்.
**மின்னஞ்சல்: varunkumarsubramani@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

தத்துவத்திலிருந்தே எல்லாத் துறைகளும் தோன்றுகிறது என்பது மானுடவியலாளர் பக்தவச்சலபாரதி அவர்களின் கருத்து. அவ்வகையில் இலக்கண உருவாக்கமும் ஏதோவொரு தத்துவப் பின்னணியிலிருந்து உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். இலக்கண உருவாக்கம் என்பது அந்நிலத்தில் உள்ள மொழி வழக்குகளையும் சமூக-வரலாற்றையும் உள்ளடக்கியதாக இருக்கும். தமிழ் நிலத்தின் வழக்குகளைத் தொகுத்துத் தரப்படுத்திக் கொடுக்கும் வேலையைத் தொல்காப்பியம் செய்திருக்கிறது. அவ்வகையில் தொல்காப்பியம் தமிழ் நிலத்தின் தத்துவ மரபைத் தன்னகத்தேக் கொண்டிருக்கிறது என்று கூறலாம். இந்தியத் தத்துவங்கள் வைதிகம் அவைதிகம் என்று இருவகையாகப் பிரிந்துள்ளது. அதில் அவைதிகத் தத்துவமான உலகாயாதம் தொல்காப்பிய திணை அமைப்புடன் எவ்வாறு பொருந்தியுள்ளது என்பதை இக்கட்டுரை விளக்கமுற்படுகிறது.

**முன்னுரை**

இந்தியத் தத்துவங்கள் பொதுவாக வேதத்தினை மையமாகக் கொண்டே கட்டமைக்கப்பட்டுள்ளது. வேதத்தை ஏற்கும் தத்துவங்கள் வைதிகத் தத்துவம் என்றும் மறுப்பவை அவைதீகத் தத்துவம் என்றும் இரண்டாகப் பிரித்துக் கொள்ளலாம். அவைதிகத் தத்துவங்களாக உலகாயதம், சமணம் மற்றும் பௌத்தம் மூன்றும் முன்வைக்கப்படுகின்றன. பழைய மற்றும் தொடக்கக்காலத் தத்துவமாக உலகாயதம் பார்க்கப்படுகிறது. பெரிதும் இயற்கை மற்றும் பூதவாதக் கொள்கையை அடிப்படையாகக் கொண்ட உலகாயத மரபு தொல்காப்பிய திணை அமைப்புடன் பொருத்தி விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**தத்துவம்**

அடிப்படை கேள்விகள் மற்றும் விவாதங்கள் தத்துவம் என்று பொதுவாக விளக்கப்படுகிறது. பொருள்களைப் பற்றிய பகுப்பாய்வு என்றும் சொல்லலாம். இங்குப் பொருள் என்பது பொருள் (Object) மற்றும் கருத்து (Subject) இரண்டையும் குறித்து நிற்கிறது. தத்துவத்தின் பிரிவுகளாக அறிவாராய்ச்சியியல் (Epistemology), இருத்தலியல் (Ontology), அறவியல் (Ethics) மற்றும் அழகியல் (Aesthetics) இருக்கின்றன. இந்திய மரபில் தத்துவம் ‘தத்’ என்ற சொல்லிலிருந்து பிறந்ததாகக் கூறப்படுகிறது. தத் என்றால் ‘மெய்’ என்று பொருள். அதாவது பொருளின் மெய்மைத்தன்மையை அறிவதே தத்துவமாகும். இந்தியத் தத்துவங்கள் சமயங்களைச் சார்ந்தும்

, | Copyright © Author(s)

அதனை வளர்க்கும் வகையிலே இயங்குகின்றன. சமயங்களை/ வேதத்தை எதிர்த்த அவைதிக தத்துவங்களான சமணம் மற்றும் பௌத்தம் பின்னாளில் சமய வடிவம் பெற்றன.

இந்தியத் தத்துவங்களை அளவைகளைக் கொண்டே எளிமையாக விளங்கிக்கொள்ளலாம். அளவைகளை வடநூலார் பிரமாணம் என்பர். இந்த அளவைகள், புலன்கள் பொருட்களுடனான ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்பு மூலம் பெறக்கூடிய அறிவு வரும் வழியை விளக்குகிறது. இந்திய மரபில் அளவைகள் பற்றிய கருத்து நையாயிகரிடம் சிறப்பாக உள்ளது. "எவ்வித அறிவும் நிகழ்வதற்கு நான்கு அம்சங்களும் தேவை. இவை நான்கும் இன்றியமையாதவை. முதலாவது, அறிவு நிகழ்வதற்கு நிலைக்களனான அறிபவன் தேவை இவனை வடமொழியாளர் பிரமாதா என்பர். இரண்டாவது, அறியப்படும் பொருள். இது பிரமேயம் எனப்படும். மூன்றாவது, அறிவு வரும் வழி. இதுவே மேலே குறிப்பிடப்பட்ட பிரமாணமாகும். நான்காவது அறிவு, இது பிரமிதி எனப்படும். பிரமாதா, பிரமேயம், பிரமாணம், பிரமிதி, அதாவது முறையே அறிபவன், அறிபொருள், அறிவு வரும் வழி, அறிவு ஆகிய நான்கனுள்ளும் அறிவைப் பெறும் வழியாகிய பிரமாணத்துக்கு முதன்மை கொடுத்தனர் நையாயிகர்" (2023:250).

பொதுவாக பத்து அளவைகள் இந்தியத் தத்துவங்கள் கொண்டுள்ளது. அதனைச் சுருக்கி மூன்றாகக் கொள்வர். காட்சியளவை (காண்டல்\பிரத்தியட்சம்), அனுமான அளவை (கருதல்) மற்றும் உரை அளவை. இதில் உலகாயதர்கள் முதன்மையான காட்சியளவையை மட்டுமே அறிவு வரும் வழியாகக் கொள்வர். அனுமானங்களையோ ஆப்தவாக்கியம் என்று சொல்லப்படும் உரையளவையோ அவர்கள் எடுத்துக்கொள்வதில்லை. காட்சியளவைக்குப் புலப்படாத எதுவும் அவர்களுக்கு மெய்ப்பொருள் இல்லை.

**உலகாயதம்**

உலகாயத மரபு புலன்கள் மூலம் கிட்டக்கூடிய அறிவையே ஏற்கிறது. அதாவது காட்சியளவையினால் கிடைக்கக்கூடிய அறிவே அறிவு என்று கூறுகிறது. இந்தியத் தத்துவம் இறை, உலகம், ஆன்மா என்ற மூன்று பொருட்களைப் பற்றியே ஆராய்ச்சி செய்கிறது. அனுமானம் மற்றும் உரை அளவையினால் விளக்கப்படும் இறை மற்றும் ஆன்மா என்ற கருத்தினை உலகாயதர் ஏற்கவில்லை. எனவே காட்சியளவையால் புலனறிவுக்குத் தெரியும் இந்த உலகம் மற்றும் உடலையே அவர்கள் உண்மை என்று நம்புகிறார்கள். மற்றவை பற்றிய ஏற்பும் ஆராய்ச்சியும் பெரிதாக அவர்கள் மேற்கொள்ளவில்லை. காட்சியளவை என்றால் என்ன மற்றும் உலகாயதரின் உலக உற்பத்திக் கொள்கையைப் பற்றி சுருக்கமாக விளங்கிக்கொள்வதன் மூலம் இவை தொல்காப்பிய திணை அமைப்புடன் எவ்வகையில் பொருந்துகிறது என்பதைப் புரிந்துக் கொள்வது

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

எளிமையாகும்.

**காட்சியளவை**

காட்சியளவை அல்லது பிரத்தியட்ச பிரமாணம் என்பது ஐம்புலன்களால் அறியப்படும் அறிவாகும். ஐம்புலன்களின் (மெய், வாய், கண், செவி, மூக்கு) உதவியோடு பொருள்களின் மெய்ம்மையை ஆராய்ந்தறிதலே காட்சியளவையின் பண்பாகும். புலனறிவின் தன்மைகளாக "கண்ணால் வண்ண உரு அறிதலும்; செவியால் ஓசை யறிதலும்; மூக்கால் மணம் அறிதலும்; நாவாற் சுவையறிதலும்; மெய்யால் ஊறுணர்வறிதலும் ஆகும்" (1956:375) என்று விளக்கப்படுகிறது. இப்புலனறிவினால் துலக்கமாகத் தெரியக்கூடிய \ அறியக்கூடிய அறிவு என்பதே உண்மையானது என்று காட்சியளவை நம்புகிறது. இதன் வழி 'இடம் (தேசம்), பெயர் (நாமம்), இனம் (சாதி), பண்பு (குணம்), செய்கை (கிரியை)' (1956:376) ஆகிய ஐந்து கூறுகளை அறிவதே காட்சியளவை ஆகும்.

**உலக உற்பத்தி**

உலக உற்பத்தியான கதைகள் மேலை மற்றும் கீழைத் தத்துவங்களில் நிறைய உள்ளன. இக்கதைகள் பெரும்பான்மை சமயம் சார்ந்ததாகவும் கற்பனைகள் கலந்ததாகவுமே அமைந்துள்ளன. அவ்வகையில் பூதவாதத் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு இவ்வுலகம் உற்பத்தியானது என்ற கருத்தை முன்வைக்கின்றது உலகாயதம். ஐம்பூதங்களிலும் காட்சிக்குப் புலனாகும் நிலம், நீர், காற்று, நெருப்பு ஆகிய நான்கையே உலகாயதர் ஏற்பர். காட்சிக்குப் புலனாகாது அனுமானம் வழியே அறியப்படும் ஆகாயத்தை இவர்கள் ஏற்பதில்லை. மேற்கூறிய நான்கு பூதங்களின் தன்மைக்கு ஏற்றவகையில் ஏற்பட்ட சேர்க்கையின் மூலமே இந்த உலகமும் உடலும் தோன்றியதாக அவர்கள் கூறுகிறார்கள். இந்த பூதங்களின் சேர்க்கை நீங்கினால் அவை அழிந்து மீண்டும் அந்தந்த பூதங்களுள் சென்று அடங்கிவிடும் என்றும் அதுவே அதன் இயல்பு என்கிறார்கள்.

**திணை அமைப்பும் உலக உற்பத்திக் கொள்கையும் ஓர் ஒப்பீடு**

தொல்காப்பிய கவிதை கட்டமைப்பில் திணை அமைப்பானது முதன்மையான ஒன்றாகும். திணை என்பது குலம், நிலம், ஒழுக்கம் போன்ற பல்பொருள் கொண்ட ஒருசொல். திணை என்பதை நிலம் என்று பொருள் கொள்வதன் மூலம் உலகாயத மரபோடு பொருத்தி விளக்கலாம். தொல்காப்பியர் அகத்திணையியலில் திணையுணர் கூறுகள் குறித்தான விளக்கத்தைப் பின்வருமாறு குறிப்பிடுகிறார்,

**முதல்கரு உரிப்பொருள் என்ற மூன்றே**

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

**நுவலுங் காலை முறைசிறந் தனவே**

**பாடலுட் பயின்றவை நாடுங் காலை. (தொல். அக.3)**

இங்கு முதற்கரு என்ற இருபொருள்களே முதன்மையாக எடுத்துக்கொள்ளப்படுகிறது. முதற்பொருள் என்பது,

**(அவற்றுள்)**

**முதலெனப் படுவது நிலம்பொழு திரண்டின்**

**இயல்பென மொழிப இயல்புணர்ந் தோரே. (தொல். அக.4)**

முதற்பொருள் என்று சிறப்பித்துக் கூறப்படுவது நிலம், பொழுது என்ற இரண்டின் இயற்கை என்று குறிப்பிடுகிறார். இந்த நிலம் / உலகம் என்பது எப்படி தோற்றம் கொண்டது என்பது மரபியலில் குறிப்பிடுகிறார்.

**நிலம் தீ நீர்வளி விசும்பொ டைந்தும்**

**கலந்த மயக்கம் உலகம் ஆதலின்... (தொல். மரபு.91)**

தொல்காப்பியம் ஏற்கும் விசும்பு (ஆகாயம்) என்ற பூதத்தை உலகாயதர் ஏற்கவில்லை என்றாலும் அடிப்படையில் இரண்டு கருத்துக்களின் உலக தோற்றம் என்பது பூதங்களின் சேர்க்கையாலே (தொல். - மயக்கம்) என்பது ஒத்துள்ளது. இதே போல் உலகாயதர் உடலை ஏற்கிறார்களே ஒழிய உயிர் என்ற கருத்தை ஏற்பதில்லை. இந்த உலகம் எப்படி ஐம்பூதங்களின் சேர்க்கையால் தோன்றியதோ இந்த உலகப் பொருட்களும் உடலும் தோன்றியது. தொல்காப்பியம் கருப்பொருட்களை நாம் உலகம் அல்லது நிலம் உற்பத்தி செய்த பொருட்களாகக் கொள்ளலாம்.

**தெய்வம் உணாவே மாமரம் புட்பறை**

**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**

**அவ்வகை பிறவும் கருவென மொழிப. (தொல். அக.20)**

கருப்பொருள் என்பது முதற்பொருளான நிலம் மற்றும் பொழுதின் கலப்பினால் தோன்றி அந்நிலத்திற்கு ஏற்ப இயல்புகளைக் கொண்டதாகும். மக்களைக் கருப்பொருளில் அடக்காத தொல்காப்பியரின் சிந்தனை என்னை எனின்? “உரிப்பொருள் என்பது மக்களின் ஒழுகலாறன்றிப் பிறிதில்லை. மக்களோ கருப்பொருளின் ஒரு கூறாவார். கருப்பொருள் என்பது நிலமும் பொழுதுமாகிய முதற்பொருளின் கலப்பினால் தோன்றி அவ்வந் நிலவியல்புகளைக் கொண்டிலங்குவதாகும். எனவே மக்களும் அவர்தம் ஒழுகலாறும் முதற்பொருளொடும் கருப்பொருளொடும் இயைபுபட்டுள்ளமை விளங்கத் தொன்னூலோர் அங்ஙனம் இயைத்துக் கூறிச்சென்றனர்.” (2012:41-42) எனவே மக்களும் கருப்பொருளில் அடங்குவர் என்பது தெளிவு.

*Tamilmanam International Research Journal of Tamil Studies* *ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*Volume 7, Issue 05 (May-2026)*
www.tamilmanam.in *DOI: https://doi.org/10.63300/tm07052026*

உலகாயதத்தின் அடிப்படை நோக்கமாக இவ்வுலக வாழ்க்கையை அடிப்படையாகக் கொண்ட வாழ்க்கை முறையாகவே இருக்கிறது. அதிலும் உலக பொருட்களினால் வரும் இன்பதுன்பங்களையே பற்றியான சிந்தனை மரபையே கொண்டது. இதனைத் தொல்காப்பியம் இப்படிக் கூறுகிறது,

**எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**

**தானமர்ந்து வரூஉம் மேவற் றாகும் (தொல். அக.28)**

உலகம் அதில் உற்பத்தியான பொருட்களுக்கு மட்டுமே முதன்மை கொடுக்கும் உலகாயதம் இறைவன், ஆன்மா, பாவம், புண்ணியம் மற்றும் மறுமை கொள்கைகளை ஏற்காத காரணத்தினால் உலகம் தாண்டிய அப்பாலைத் தத்துவமான வீடு பேறு பற்றியச் சிந்தனையை உலகாயதம் கொண்டிருக்கவில்லை. தொல்காப்பியமும் வீடு பேற்றைப் பற்றி பேசாமல் இன்பத்தை அடிப்படையாகக் கொண்டே பொருளும் அறமும் இயங்குகிறது என்ற அடிப்படையில் அமைந்துள்ளது.

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு... (தொல். களவு.89)**

முதல் மற்றும் கருப்பொருள் இரண்டும் உலகாயதரின் பூத சேர்க்கைக் கொள்கையின் மூலம் உற்பத்தியானது என்ற கருத்தைக் கொண்டு ஒப்பிட்டு விளக்கப்பட்டுள்ளது. அதேபோல் உலகமும் பொருட்களுமே வாழ்க்கையின் நோக்கமாக இருக்க இவ்வாழ்க்கைக்கு பிறகான நிலையைப் பற்றி சிந்திப்பதின் தேவையின்மை அதில் உள்ளோடும் சிந்தனையாக இருக்கிறது. அடிப்படையில் உலகாயதத்தை 'பொருள்முதல்வாத' சிந்தனையைக் கொண்டது எனக் கூறலாம்.

**காட்சியளவை மற்றும் உவமத் தோற்றம் ஓர் ஒப்பீடு**

தொல்காப்பியக் கவிதைக் கூறுகளுள் ஒன்றாக இருப்பது உவமை. உவமை திணைக் கவிதை உருவாக்கத்தில் திணையுணர் கருவியாகச் செயல்படுகிறது என்கிறார் ச.பாலசுந்தரம். அவ்வகையில் உவமத் தோற்றங்களாக நான்கினை முன்வைக்கிறது தொல்காப்பியம்.

**வினைப்பயன் மெய்உரு என்ற நான்கே**

**வகைபெற வந்த உவமத் தோற்றம். (தொல். உவம.1)**

தொழிலும் பயனும் வடிவும் நிறனும் என்று சொல்லப்பட்ட நான்குமே அப்பாகுபட வந்த உவமைத் தோன்றும் முறை என்பதே இதன் பொருளாகும். காட்சியளவை வரும் கூறுகளாக மேற்கூறிய பண்பு (குணம்), செய்கை (கிரியை) ஆகியவற்றுடன் முறையே மெய், உரு (பண்பு) மற்றும் வினை (செய்கை) உவமையுடன் பொருத்தலாம். 'புலியன்ன மறவன்' என்பது புலியின் வினையாளுமையுடன் தொடர்புடைய தன்மையில் இருந்து வருகிறது. 'துடியிடை,

*ISSN: 3049-0723 (Online), 3107-7781 (Print)*
*DOI: https://doi.org/10.63300/tm07052026*

பொன்மேனி' ஆகியவை மெய் உவமைக்கும் உரு உவமைக்கும் காட்டாக வருகிறது. பயன் உவமை நாம் காணும் ஒரு பொருள் இன்னொரு பொருள் தரும் அதே பயனைத்தரின் அது பயன் உவமை. 'மாரியன்ன வண்கை' என்பது மழைபோன்ற பயன்தரும் கைகளைக் குறிக்கிறது. உவமைகள் என்பது அளவைகளில் தனித்த அளவையாகக் கூறப்பட்டியிருப்பினும் அவையும் காட்சியளவையை அடிப்படையாகக் கொண்டே தோன்றுகிறது என்பதே கருத்தாக இருக்கிறது.

**முடிவுரை**

ஒரு பனுவல் அல்லது பிரதி உருவாகுவதற்குப் பின்னணியில் ஏதோ ஒரு தத்துவம் இயங்கிக் கொண்டு இருக்கும். அவ்வகையில் அந்த பனுவலாக்கத்திலோ அல்லது உள்ளடக்கத்திலோ அதன் தத்துவப் பின்னணி வெளிப்படும். தொல்காப்பிய இலக்கண மரபு சமண தத்துவத்தைச் சார்ந்தது என்ற கருத்து அதன் வினைக்கொள்கையை அடிப்படையாகக்கொண்டு சொல்லப்படுகிறது. உலகாயதம் என்பது எல்லாவற்றிற்கும் முந்தைய தத்துவமாகக் கூறப்படுவதன் காரணம் மற்ற எல்லா தத்துவங்களும் இதனை அடிப்படையாகக் கொண்டே வளர்ச்சியடைந்துள்ளது. அவ்வகையில் இயற்கை மற்றும் பூதவாத நிலையில் உள்ள உலகாயதம் தொல்காப்பியம்/தமிழர் திணையியல் தத்துவத்துடன் பொருந்துகிறது எனலாம். இதனடிப்படையில் உலகாயதரின் உலக உற்பத்திக் கொள்கை திணை அமைப்புடனும் அடிப்படையில் உள்ள காட்சியளவை திணையுணர் கருவியான உவமத் தோற்றத்துடன் பொருத்தி விளக்கப்பட்டுள்ளது.

**பார்வை நூல்**

[1.] அப்பாதுரை.கா, ஆயிரத்தெண்ணூறு ஆண்டுகட்கு முதற்பட்ட தமிழகம், திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட், சென்னை, 1956.

[2.] பாலசுந்தரம்.ச,தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-3, பகுதி -1, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2012.

[3.] பாலசுந்தரம்.ச,தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி-3, பகுதி -3, பெரியார் பல்கலைக்கழகம், சேலம், 2012.

[4.] லக்ஷ்மணன்.கி, இந்திய தத்துவ ஞானம், பழனியப்பா பிரதர்ஸ், சென்னை, 2023.

, | Copyright © Author(s)